Registered as a Newspaper

பெண்மைக்கு மெருகேற்றும்
இளமைக்கு எழிலூட்டும்
தரமான
தங்க நகைகளை
அளிப்பவர்கள்
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்நகர்.
தொலைபேசி: 23628

உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை:
ரூ 1-25

சுடர்: 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஞூ மாசி மீ 6 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1407 ஜமா ஆகிர் பிறை 19 (18-02-1987) UTHAYAM A LIVELY TAMIL DAILY இதழ் 71

அழகிய கலைநயம் மிக்க
புதுமையான
22 KT
தங்க நகைகளை
ஆடர் செய்து
பெற்றுக்கொள்ள
நாடுங்கள்
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
தொலைபேசி: 23628

ஹெலிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்

உப உறுப்புகள் வந்தன

கொழும்பு, பெப். 18 ஹெலிக்கொப்டர்களைப் பொருத்துவதற்குத் தேவையான உப உறுப்புகள் விமான மூலம் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் அண்மையில் வந்திறங்கின.

ஆறு கொள்கலன்களில் வந்திறங்கிய இந்த உப உறுப்புகள், உதிரிப் பாகங்கள் ரத்மலானைக்கு உடனடியாக எடுத்துச் செல்லப்பட்டன.

அங்கு வைத்து உப உறுப்புகளைப் பொருத்தி ஹெலிக்கொப்டர்கள் தயாரிக்கப்படும்.

இந்த ஹெலிக்கொப்டர்கள் வடக்கு முகாம்களுக்கு அனுப்பிவைக்கப்படும் என்று தெரிகிறது.

இப் பாகங்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவை என்பது தெரியவில்லை. (உ-ஐ-எ)

நாவற்குழி இராணுவ முகாமுக்கு தொடர்ந்து தண்ணீர் விநியோகம்

அன்ட்றீஸ் நிறுவனம் வழங்குகிறது

யாழ்ப்பாணம், பெப் 18 நாவற்குழி இராணுவ முகாமுக்கு 'அன்ட்றீஸ்' நிறுவனம் தொடர்ந்தும் குடி தண்ணீர் வழங்கி வருகின்றது.

அன்ட்றீஸ் தொழிற்சாலைக் கட்டடத்தில் நாவற்குழி முகாம் சிப்பாய்கள் முகாம் அமைந்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ள போதிலும் அதில் எதுவித உண்மையும் இல்லை என ஊழியர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை கடந்த சனிக்கிழமை கைதடியில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தின் போது அன்ட்றீஸ் நிறுவன ஊழியர்களிலும் மூவர் கொல்லப்பட்டனர்.

இதன் காரணமாக கடந்த சனிக்கிழமை முதல் அன்ட்றீஸ் நிறுவன தொழிற்சாலையில் வேலைகள் எதுவும் நடைபெறவில்லை.

எனினும் நாவற்குழி சிப்பாய்களுக்கு அன்ட்றீஸ் நிறுவனத்தினால் வழங்கப்பட்டு வரும் குடிதண்ணீர் எதுவித தடையும் இன்றி தொடர்ந்தும் வழங்கப்பட்டு வருவதாக ஊழியர்கள் தெரிவித்தனர்.

இந்த நிறுவனத்தில் 500க்கும் அதிகமான ஊழியர்கள் கடமையாற்றி வருகிறார்கள்.

குண்டு வெடிப்புக்கு பலியான அன்ட்றீஸ் நிறுவன ஊழியர்களின் விவரம் வருமாறு:-

ஏ. அல்பிரட் (போக்குவரத்து முகாமையாளர்) நாவற்குழி, எஸ் ராமு (இயந்திர இயக்குனர்) கைதடி எஸ் ஆனந்தன் (சாரதி) முல்லைத்தீவு. (இ-10)

வ.பி.போ.ச. பஸ்சேவை முற்றாக ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம், பெப் 18 வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் உள்ளூர் பஸ் சேவைகளை தொடர்ந்து நடத்துவதற்கு டீசல் இல்லை.

இதன் காரணமாக நேற்று உள்ளூர் பஸ் சேவைகள் எதுவும் நடைபெறவில்லை.

இன்றும் நடைபெற மாட்டாது என தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் உயரதிகாரி ஒருவர் அவசர அவசரமாக வவுனியாவுக்கு சென்றுள்ளார்.

வட பிராந்திய போக்குவரத்துச் சேவையின் ஸ்தம்பித நிலை குறித்தும் அவர் அங்குள்ள உயரதிகாரிகளுடன் பேச்சு நடத்தவுள்ளார். (உ-10)

லொறிக் கொள்ளை: பொருட்கள் மீட்பு

யாழ்ப்பாணம், பெப்.18 கடந்த ஆறும் திகதி வென்னப்புவ பகுதியில் நடைபெற்ற லொறிக் கொள்ளையின் போது காணாமல் போன பல பொருட்கள் வென்னப்புவ பொலீசினால் மீட்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் உள்ள பல தனியார் நிறுவனங்களுக்கு இந்த

(4-ம் பக்கம் பார்க்க)

சாவகச்சேரியில் நேற்றும் துக்கம் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், பெப். 18 சாவகச்சேரிப் பகுதியில் நேற்றும் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

கடந்த சனிக்கிழமை கைதடியில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்தின் போது தென்மராட்சிப் பொறுப்பாளர் மேஜர் கேடில்ஸ் பலியானதை அடுத்து மூன்று நாட்கள் இப் பகுதியில் துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது (இ-10)

பட்ஜட் கூட்டுத் தொடர்

சென்னை, பெப். 18 தமிழ் நாடு சட்டசபையின் பட்ஜட் கூட்டத் தொடர் இம்மாதம் 27 ஆம் திகதி ஆரம்பமாகும்.

அண்மையில் மறைந்த முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலத்திற்கு அனுதாபப்பிரேரணை முதலில் நிறைவேற்றப்படும்.

ராஜீவ் - ஸியா புதுடில்லியில் சந்திப்பு

புதுடில்லி, பெப். 17 இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் பாகிஸ்தான் ஜனாதிபதி ஸியா-உல்-ஹக்கும் எதிர்வரும் சனிக்கிழமை புதுடில்லியில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவார்கள்.

இந்திய-பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நடைபெறும் டெஸ்ட் ஆட்டத்தைக் கண்டு களிப்பதற்காக ஜனாதிபதி ஸியா இந்தியா வருகிறார்.

அச்சமயம் இந்தச் சந்திப்பு நடைபெறும்.

இரு நாடுகளுக்கிடையிலும் உறவு சீர்குலைந்திருக்கும் இவ்வேளையில் நடைபெறும் இச்சந்திப்பு மிக முக்கியமானதென்றாகக் கருதப்படுகிறது.

மற்றுமொரு செய்தி (4-ஆம் பக்கத்தில்) (உ)

அரசியல் தஞ்சம் வழங்க மறுப்பு

ஈழத்தமிழர் 58 பேரை பிரிட்டன் நாடு கடத்தும்

அதனைத் தடுப்பதற்கு

எதிர்க்கட்சி எம். பி. முழு முயற்சி

லண்டன், பெப்ரவரி 17

அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்ட 58 ஈழத் தமிழர்களை நாடு கடத்துவதற்கு பிரிட்டன் முடிவு செய்துள்ளது. மேலும் அறுவரைத் தடுத்து வைப்பது எனவும் அவர்களைப் பின்னர் நாடு கடத்துவது எனவும் முடிவாகி இருந்தது.

எனினும் பிரிட்டிஷ் அரசின் நாடு கடத்தும் முடிவு, ஜெனீவா ஒப்பந்தத்தை மீறுவதாகக் கூறி எதிர்க் கட்சி எம். பி. யான ஜெர்மி கோவின் (தொழிற் கட்சி) ஆட்சேபம் தெரிவித்திருக்கிறார். நாடு கடத்தலைத் தடுக்கவும் அவர் முழு முயற்சி மேற்கொண்டிருந்தார்.

இந்த 58 பேரும் நேற்று மாலை நாடுகடத்தப்பட விருந்தனர்.

இவர்கள் அனைவரும் பங்களாதேஷ் தலைநகரான டாக்காவில் இருந்து கடந்த வெள்ளிக்கிழமை லண்டனுக்கு விமான மூலம் போய்ச் சேர்ந்தனர்.

லண்டனில் இறங்கியவுடன் அனைவரும் அரசியல் தஞ்சம் கோரும் விண்ணப்பங்களை உள்துறை அமைச்சு அதிகாரிகளிடம் சமர்ப்பித்தனர்.

விசாரணையின் பின்னர் விண்ணப்பங்களை உள்துறை அமைச்சு நிராகரித்து விட்டது.

இப்போது இவர்களை டாக்காவுக்கே திருப்பி அனுப்ப பிரிட்டன் தீர்மானித்துள்ளது. அதன்படி நேற்று செவ்வாய் மாலை அவர்கள் டாக்காவுக்குத் திருப்பி அனுப்பப்படவிருந்தனர்.

விண்ணப்பங்களை நிராகரித்ததற்கான காரணங்களை உள்துறை அமைச்சு வெளியிட்டுள்ளது.

மீண்டும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டால் அவர்கள் அங்கு துன்புறுத்தல்களுக்கு ஆளாகுவார்கள் என்பது விசாரணையின் போது நிரூபிக்கப்பட

(4 ஆம் பக்கம் பார்க்க)

லொறிகள் தடுத்து வைப்பு

யாழ்ப்பாணம், பெப். 18 ஆனையிறவு இராணுவ முகாமில் நேற்று சுமார் 25 லொறிகள் தடுத்து வைக்கப்பட்டிருந்தன.

யாழ் குடாநாட்டுக்குள் நுழையும் லொறிகளை சிப்பாய்கள் சோதனையிடுவதில் அதிக அக்கறை காட்டுவதாகவும் - சகல பொருட்களையும் மிக நுணுக்கமாக சோதனையிடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

சிட்டிழுப்பு 20ஆம் திகதி

யாழ்ப்பாணம், பெப் 18 தமிழ் ஈழ இராணுவம் நடத்தி வந்த நான்காவது சுவிப் இழுப்பு 20ஆம் திகதி குலுக்கப்படும் என விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இந்தச் சிட்டிழுப்பு 15 ஆம் திகதி இழுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் தவிர்க்க முடியாத காரணங்களால் 20 ஆம் திகதிக்கு பின்போடப்பட்டிருப்பதாக விடுதலைப் புலிகள் தெரிவித்தனர். (இ-10)

இஸ்ரவேலில் இலங்கை வீரர்களுக்கு ராஜ உபசாரம்!

டெல்அவிவ், பெப் 17 இஸ்ரவேலில் சிகிச்சை பெறும் இலங்கை இராணுவ வீரர்களை தனது மாளிகைக்கு அழைத்து உபசாரம் செய்தார் இஸ்ரவேல் ஜனாதிபதி செயிம் ஹெர்ஸோக்.

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் தீவிரவாதிகளின் தாக்குதல்களில் காயமடைந்த சிப்பாய்கள் செயற்கைக் கைகள், கால்கள் பொருத்தப்படுவதற்காக இஸ்ரவேலுக்கு இலங்கை அரசினால் அனுப்பிவைக்கப்படுகின்றனர்.

அப்படி அனுப்பிவைக்கப்பட்டவர்களில் சிலரையே இஸ்ரவேல் ஜனாதிபதி தனது மாளிகைக்கு அழைத்து உபசரித்தார்.

லான்ஸ் கோப்ரல்கள் கே. துஸிதர, ரி. கமகே, கோப்ரல் எச். குணசேகரா ஆகியோர் தான் உபசரிக்கப்பட்டவர்கள்.

கொழும்பு பல்கலைக் கழகத்தில் அரசியல் விஞ்ஞானப் பேராசிரியராகப் பணிபுரிந்த பின்னர் தற்சமயம் இஸ்ரவேல் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சிப் பணியில் ஈடுபட்டுள்ள டாக்டர் ஜி. வி. பி. சோமரத்ன மொழிபெயர்ப்பாளராக அச்சந்திப்பின்போது இருந்தார். (உ-ஐ-எ)

தமிழர் படுகொலைகளைக் கண்டித்து:

தமிழகம் பொங்கும்

அனைத்துக்கட்சிகளும் தயார்!

சென்னை, பெப்.18 இலங்கைத் தமிழர் படுகொலைகளைக் கண்டித்து தமிழகம் மீண்டும் பொங்கி எழும்.

தமிழ் நாட்டில் எழுச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முயற்சியில் அனைத்துக் கட்சியின் தலைவர்களும் ஈடுபட்டிருப்பதாக சென்னையில் இருந்து வெளியாகும் "தினசரி" நாளிதழ் தகவல் தெரிவித்திருக்கிறது.

இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக தமிழக அரசியலில் நிலவிய தேக்க நிலை மறைந்து இப்பிரச்சினை மீண்டும் அங்கு 'சூடு' பிடித்திருக்கிறது.

எழுச்சி நடவடிக்கைகளின் முதற் கட்டமாகவே திங்கட்கிழமையன்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் கண்டனப் பேரணி நடைபெற்றது.

தமிழகத்தில் எழுச்சி நடவடிக்கையை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்காக முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரனுடனும் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது.

பந்த், உண்ணாவிரதம் போன்ற எழுச்சிகளை தமிழகம் முழுவதிலும் ஏற்

(4-ஆம் பக்கம் பார்க்க)

மீனவர் சூட்டுக்குப்பலி

யாழ்ப்பாணம், பெப்.18 நேற்று இரவு யாழ்ப்பாணம் நாவாந்துறைப் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த வயோதிப மீனவர் ஒருவர் கோட்டை இராணுவ முகாமிலிருந்து வந்த துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்.

படுகாயமடைந்த இந்த மீனவர் யாழ் ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்படுகையில் வழியில் மரணமானார். (உ)

சுபநேரம்

18 02—1987

புதன்கிழமை

சுபநேரம்:
5-02 முதல் 6-32 வரை
ராகுகாலம்:
12-32 முதல் 2-02 வரை
இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்

மின்னல் செய்தி

தமிழர் படுகொலை இந்தியாவுக்குக் கவலை தரும் விடயமல்ல!

சென்னை, பெப். 17 மட்டக்களப்பு மாவட்டத்தில் 200க்கு அதிகமான அப்பாவித் தமிழர் ஆயுத படையினரால் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் இந்தியாவில் அதிர்ச்சியை ஏற்படுத்தவில்லை.

இலங்கையில் இடம்பெறும் இனப் படுகொலைகள் இந்திய அரசு, பொதுமக்கள் மனதில் பழக்கப்பட்ட ஒரு சம்பவமாகக் கருதப்பட ஆரம்பித்துள்ளது கவலையைத் தருகின்றது.

இப்படி 'இந்து' நாளிதழின் (9-2-87) பிரதான ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது (உ-எ)

கொலையைக் கண்டித்து

ஆசிரியர்கள் நடத்திய மௌன ஊர்வலம்

யாழ்ப்பாணம், பெப். 18 பலாலி ஆசிரியர் கலாசாலையில் பயிற்சி பெறும் ஆசிரியர்கள், தம்முடைய உடன் ஆசிரியையான திருமதி மலராசினி கமலநாதனின் படுகொலையைக் கண்டித்து நேற்று மௌன ஊர்வலம் நடத்தினர்.

திருமதி மலராசினி கமலநாதன் தமது வார விடுமுறையை வவுனியாவில் கழித்துவிட்டு யாழ்ப்பாணம் திரும்பும் வழியில் பரந்தனில் இராணுவத்தினரால் பஸ்ஸில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார்.

இவரது உடன் ஆசிரி

(4 ஆம் பக்கம் பார்க்க)

கைதடியில் ஹெலி நடமாட்டம்

யாழ்ப்பாணம், பெப் 18 கைதடி, நாவற்குழிப் பகுதியில் நேற்று ஹெலிகொப்டர் ஒன்று வட்டமிட்டுத் திரிந்தது.

சனிக்கிழமை கைதடியில் விபத்து நடந்த இடத்தையும் ஹெலி வட்டமிட்டுத் திரிந்தது.

கோப்பாய்ப்பாலத்தால் சென்று கொண்டிருந்த வாகனங்களும் ஹெலியில் இருந்தபடி நோட்டம் இடப்பட்டன (இ-10)

முச்சந்தி முனி



இந்தியா ஏதோ வெட்டிக் கிழிச்சுவிடும் எண்டு நாங்களும் நினைக்க வேண்டியது தான்! அவைக்கு இப்ப எல்லாம் பழக்கப்பட்டுப் போச்சாமே!

★ ஜெனீவாவில் அரசியல் தஞ்சம் கோரிய

7 தமிழ் பெண்கள் 8 குழந்தைகள் விமானநிலையத்தில் தடுத்துவைப்பு

கணவன்மார் வெளியே உண்ணாவிரதம்

ஜெனீவா, பெப் 17 ஜெனீவா விமான நிலையத்தில் நிலத்துக்கடியில் உள்ள வரவேற்பு நிலையத்தில் ஏழு இலங்கைத் தமிழ்ப் பெண்கள் 8 குழந்தைகளுடன் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இப்பெண்களின் கணவன்மார் விமான நிலையத்தின் வெளிப்புறம் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அவர்களைச் சந்திக்க இப்பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் சுவிஸ் அதிகாரிகள் அனுமதி வழங்க மறுத்து விட்டனர்.

இவர்களை என்ன செய்வது என்று சுவிஸ் அதிகாரிகள் தீர்மானிக்கும் வரை இவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருப்பர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இப்பெண்கள் குழந்தைகளுடன் விசா இன்றி சென்ற மாதம் 28 ஆம் திகதி ஜெனீவா விமான நிலையம் வந்தடைந்தனர்.

அரசியல் தஞ்சம்கோரி விண்ணப்பித்த கணவன்மார், தங்கள் குடும்பத்தினரை வரவேற்பு நிலையத்தில் அடைத்து வைத்திருப்பதைத் தொடர்ந்து, விமான நிலையத்தின் வெளிப்புறம் உண்ணாவிர

(4 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

அகதி குடும்பங்களுக்கு கிளிநொச்சியில் குடியிருப்புத் திட்டங்கள்

யாழ்ப்பாணம், பெப். 18 தமிழர் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தினர் 277 அகதிக் குடும்பங்களுக்கு கிளிநொச்சியில் குடியிருப்புத் திட்டங்களைச் செய்துள்ளனர்

இக் குடியிருப்புகளில் குடிமனைகள், கிணறுகள், பயிர்ச்செய்கைக் காணிகள் என்பன அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன

இவற்றிற்கென தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் 24 லட்சத்து 65 ஆயிரத்து 476 ரூபாவை செலவிட்டுள்ளது

குடியேற்றப்பட்ட அகதிகள் யாவரும் 1983ஆம் ஆண்டிற்கு பின் அகதிகளாகக் கிளிநொச்சிக்கு வந்தவர்கள்.

கோணாவில் குடியிருப்புத் திட்டத்தில் 50 ஏக்கர் பயிர்ச்செய்கை நிலமும், 21 குடிமனைகளும் 25 கிணறுகளும் அமைக்கப்பட்டுள்ளன--

குருகுலம் குடியேற்றத் திட்டத்தில் 13 குடிமனைகளும் 2 கிணறுகளும் அமைக்கப்பட்டுள்ளன-

முறிப்பு குடியேற்றத் திட்டத்தில் 140 குடிமனைகளும் 89 கிணறுகளும் 180 ஏக்கர் பயிர்செய்கை நிலமும் அமைக்கப்பட்டுள்ளன--

ஊற்று குடியேற்றத் திட்டத்தில் 120 குடிமனைகளும் 89 கிணறுகளும் அமைக்கப்பட்டுள்ளன, (இ-5)

சின்னஞ் சிறு விளம்பரங்கள்

சேவை

மங்கள சண்டி யந்திரத்தை வழிவடுவதால் திருமணமாகாத வயது வந்த பெண்களுக்கு விரைவில் திருமணம் நடைபெறும். தாம்பத்திய உறவில் கசப்புடையோரும், குடும்பப் பிரிவுடையோரும் வழிபடலாம். இலவச விபரங்களுக்கு முத்திரைக் கவர் அனுப்பிப் பெறலாம். சு. சிவஷண்முகானந்தக் குருக்கள், கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை.

காணவில்லை

ஆறுமுகம் நடராசா உசன் மிருசுவில் இலக்கம் 500470364-V என்ற அடையாள அட்டை சாவகச்சேரி – மிருசுவில் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் மேற்கூறிய விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். கிருஷ்ணமூர்த்தி (சின்னம்மா), உசன், மிருசுவில்.

லயன்ஸ் உறுப்பினர்கள் தம் சேவையை புனித சேவையாகக் கருத வேண்டும்

வட்டுக்கோட்டை, பெப் 18 லயன்ஸ் கழகங்கள் தங்கள் சேவையைப் புனிதமான சேவையாகக் கொண்டு செயலாற்ற வேண்டும். பொது மக்களுக்குப் பயன்படக் கூடிய சேவைகளைச் செய்தால்தான் பொது மக்களின் நன்மதிப்பையும் ஆதரவையும் பெற்றுக் கொள்ளலாம். பயனுள்ள சேவைகளைச் செய்யாது கூட்டங்களைக் கூட்டிக் கதைப்பதாலும் உணவுண்டு மகிழ்வதாலும் பிரயோசனம் இல்லை.

யாழ்ப்பாணம் சுபாஸ் உல்லாச விருந்தினர் மண்டபத்தில் நடைபெற்ற பிராந்திய லயன்ஸ் கழகங்களின் கருத்தரங்கிற்குத் தலைமைவகித்து உரை நிகழ்த்திய வடபிராந்திய உதவி மாவட்ட ஆளுநர் டாக்டர் ரி பகீரதன் மேற்கண்டவாறு கூறினார்.

கருத்தரங்கில் யாழ்ப்பாணம், கோப்பாய், சாவகச்சேரி, கரைச்சி, அச்சுவேலி, மானிப்பாய், மாவிட்டபுரம், வட்டுக்கோட்டை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த லயன்ஸ் கழக உறுப்பினர்கள், லியோ கழக உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

"லயன்ஸ் கழகங்கள் முகாமைத்துவத்தைக் கட்டி எழுப்புகின்றன" என்ற தலைப்பில் ஆராய்ச்சிகள், ஆலோசனைகள், முயற்சிகள் போன்ற பல்வேறு அம்சங்கள் கருத்தரங்கில் ஆராயப்பட்டன

வடபிராந்திய முன்னாள் பிரதி ஆளுநர் சட்டத்தரணி கே. குணரத்தினம் களப்பயிற்சி பற்றி உரையாற்றி கருத்தரங்கை நடத்திவைத்தார்.

வடபிராந்திய லயன்ஸ் கழகங்களின் தொழிற் பயிற்சி அதிகாரி திரு இ விஜயரத்தினம் யாழ் மாவட்டத்திலுள்ள வளங்கள் பற்றியும் பனை மரவளங்களை பயன்படுத்தும் முறைகளையும் விரிவாக விளக்கிக் கூறினார்.

வலயத் தலைவர் டாக்டர் ரி. சோமசுந்தரம் நன்றி நவின்றார் (இ-161)

பிள்ளைகளை பாடசாலை அனுப்பியதுடன் பெற்றோர் கடமை முடிந்து விடாது

ஒஸ்மானியா வைபவத்தில் உரை

யாழ்ப்பாணம், பெப். 18 பிள்ளைகளைப் பாடசாலையில் சேர்த்ததுடன் தங்களது கடமைகள் முடிவடைந்து விட்டன என்ற தவறான கருத்து தவிர்க்கப்பட வேண்டும். பிள்ளைகளின் நல்வாழ்வும் நடத்தைகளும் பெற்றோரின் சளைக்காத நல்லெண்ணத்திலும், தயாள சிந்தையிலுமே நிர்ணயம் செய்யப்படுகின்றன.

யாழ் ஒஸ்மானியா கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

விசேஷ விருந்தினராகச் சமுகமளித்த கல்வி அதிகாரி திரு. இ. சிவானந்தன் மேற்கண்டவாறு கூறினார்

அடுத்த ஆண்டிலே பூரணப்படுத்தப்பட விருக்கும் புதிய கல்வி முறைகள், பரீட்சை முறைகள் பற்றியும் தமது உரையில் திரு. சிவானந்தன் விளக்கினார். பெற்றோரின் பல வினாக்களுக்கும் அவர் விளக்கமளித்துத் தெளிவுபடுத்தினார்.

கல்லூரி அதிபர் ஜனாப் ஏ. எச். ஹாமீம் தலைமை வகித்துப் பேசுகையில், மாணவன் ஒருவன் கிரமமாகக் கல்லூரிக்கு வருகை தந்து, தனது கருமங்களில் மிகுந்த ஈடுபாட்டுடன் இருப்பது ஒன்றே பெற்றோரால் பாடசாலைக்கு வழங்கப்படும் பெரியதொரு நன்கொடையாகும் என்றார்.

நடப்பு ஆண்டுக்கான செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டு ஸலவாத் ஓதலுடன் கூட்டம் முடிவுற்றது (இ)

தேவை: Fitters - Welders

யாழ்நகரிலுள்ள என்ஜினியரிங் நிறுவனமொன்றுக்கு பொருத்துனர், ஒட்டுனர், உதவியாளர் ஆகியோர் தேவை. தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். பூரண விபரங்களுடன் ஐந்து நாட்களுக்குள் விண்ணப்பம் அனுப்பவும்.

விளம்பர எண்: 54,
மே/பா. உதயன், யாழ்ப்பாணம்.

பிரயாண ஒழுங்குகள்

● ஓமான் ● குவைத்
● சவூதி

ஆகிய நாடுகளுக்கான தொழில் வாய்ப்புடன் செல்ல விருப்புவோர் உடன் எம்மிடம் தொடர்பு கொள்ளவும்

கடிதமூலம் தொடர்பு கொள்வோர் முத்திரை ஒட்டிய கவருடன் தொடர்பு கொள்ளவும்

எமது முகவர் நிலையத்தினுல் பயணம் மேற்கொள்வோரின் பெயர் விபரங்களை வாரந்தோறும் வெளியிடுகிறோம் எமக்கு வட பகுதியில் வேறு கிளைகள் கிடையாது

உங்கள் (PASSPORT) கடவுச் சீட்டுக்கள் குறித்த தவணையில் குறைந்த செலவிற் செய்து தரப்படும்.

எம்மிடம் (PASSPORT) விண்ணப்பப் படிவமும் எல்லா நாட்டிற்கான சகலவிதமான முத்திரைகளும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

யாழ் முகவரி:
A. பத்மதாஸ்
மதுரா வீடியோ கிளப்,
இல 96, 4-ம் குறுக்குத் தெரு,
சின்னக்கடை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23549

கொழும்பு முகவரி:
HORIZON ENTERPRISES
No 87 2/1, Kollupittiya Lane,
Kollupittiya, COLOMBO-3.
T-phone: 574000

மக்கள் முகம்

உடுவில் ஸ்ரீ லங்கா வாசிகசாலை

சுன்னாகம், பெப். 18 உடுவில் ஸ்ரீலங்கா வாசிகசாலையினதும் சனசமூக நிலையத்தினதும் புதுவருட நிர்வாகிகள் தெரிவு அண்மையில் நிலைய மண்டபத்தில் நடைபெற்றது

பின்வருவோர் நடப்பாண்டுக்கான நிர்வாக சபைக்கென தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: திரு வ. பாலசிங்கம், தலைவர்: திரு. செ. முருகேசு, உபதலைவர்: திரு வே. செ இரத்தினம் செயலர்; திரு அ. கமலநாதன், பொருளாளர்: திரு. அ அருணேசராசா. நிலையப் பொறுப்பாளர்: திரு வே நடேசு, விளையாட்டுத் துறைத் தலைவர்: திரு மா. ஸ்ரீஸ்கந்தராசா,

நிர்வாகசபை உறுப்பினர்கள் திரு அ. சேதிநாதன், திரு. செ. இரத்தினம். (இ-27)

மாணவர் நலனை முதன்மையாகக் கொண்டு ஆசிரியர் கற்பிக்க வேண்டும்

கல்விப் பணிப்பாளர் உரை

யாழ்ப்பாணம், பெப் 18 எந்தவகையான இன்னல்கள் ஏற்பட்டாலும் அவற்றைப் பொருட்படுத்தாது புறக்கணித்துவிட்டு மாணவர் நலனையே முதன்மையாகக் கொண்டு ஆசிரியர்கள் கற்பிக்க வேண்டும்.

யாழ் இந்துக் கல்லூரியில் ஏழாம் ஆண்டில் விஞ்ஞானம் கற்பிப்பதற்கான மின்னியல் உபகரணத் தொகுதியை வழங்கி உரையாற்றும் போது யாழ்ப்பாண மாவட்டக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். மன்சூர் மேற்கண்டவாறு கூறினார்.

தொண்டமானாறு வெளிக்கள நிலையத்தினரால் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்ட இக்கருவிகள் இருபத்தெட்டுப் பாடசாலைகளுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

வெளிக்கள நிலையத் தலைவரும் கோத்தணி அதிபருமான திரு. கோ. செல்வநாயகம் தலைமையில் வைபவம் நடைபெற்றது.

கல்வி அதிகாரி திரு. சி. புலேந்திரன், விஞ்ஞான கல்வி அதிகாரிகளான திருவாளர்கள் எஸ். செல்லத்துரை, பா. சி. சர்மா, எஸ். நடராசா, திருமதி கணேசலிங்கம், யாழ் இந்துக் கல்லூரி அதிபர் எஸ் பொன்னம்பலம் நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சு. சிவநாயகமூர்த்தி, விஞ்ஞான பாடசேவைக்காலக் கல்வி ஆலோசகர்கள், வெளிக்கள நிலையச் செயற்குழு உறுப்பினர் ஆகியோர் வைபவத்தில் கலந்து கொண்டனர்.

உபகரணத் தொகுதியைப் பயன்படுத்திக் கற்பிக்கும் முறையை விளக்கும் வகையில் ஏழாம் ஆண்டு மாணவருக்கான மாதிரிப் பாடமொன்றும் நடைபெற்றது

வெளிக்கள நிலையச் செயலரும் நிலையக் கல்வி நெறியாளரும் ஆரம்ப விஞ்ஞானக் கல்வி ஆலோசகருமான திரு நா. சுவாமிநாதன் மாதிரிப்பாடத்தை நடத்தினார்.

பிரதம கல்வியதிகாரி திரு. எஸ் கந்தசாமியும் உரையாற்றினார்

வெளிக்கள நிலைய இணைச் செயலாளரும் யாழ் பல்கலைக் கழகக் கல்வியியற்புல விரிவுரையாளருமான திரு. க. சின்னத்தம்பி நன்றி உரை கூறினார். (இ-9)

பேராதனைப் பல்கலைக்கழகத்தில்

5 பீடங்களின் தலைவர்கள் ராஜினாமா

கொழும்பு, பெப். 18 பேராதனைப் பல்கலைக் கழகத்தின் விவசாய பீடத்தின் தலைவராக பேராசிரியர் எம், டபிள்யு. தேனபடு தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஏனைய ஐந்து பீடங்களின் தலைவர்களும் இராஜினாமாச் செய்துள்ளனர்.

கலை, விஞ்ஞானம், மிருக வைத்தியம், பல் வைத்தியம், பொறியியல் ஆகிய பீடங்களின் தலைவர்களே இராஜினாமாச் செய்துள்ளார்கள்.

முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் எச் பி. எம். குணசேனாவைத் தோற்கடித்து வெற்றியீட்டிய பேராசிரியர் தேனபடு பதவி ஏற்றதைத் தொடர்ந்து ஏனைய ஐந்து பீடாதிபதிகளும் பதவிகளை இராஜினாமாச் செய்தனர்.

இந்த ஐந்து பேரும் பீடாதிபதிகளாக போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டு உள்ளனர். (இ-எ)

ஆயுதம் தாங்கிய இளைஞர் கோஷ்டி அம்பனில் கொள்ளை

பருத்தித்துறை, பெப் 18 அம்பனில் அதிகாலை வேளையில் ஆயுதம் தாங்கிய இளைஞர் கோஷ்டி இருவீடுகளைக் கொள்ளையடித்தது

இக்கொள்ளைக் கோஷ்டியினர் பயங்கர ஆயுதங்களையும் கைத்துப்பாக்கியையும் கொண்டு திரு வல்லிபுரம் கோபாலபிள்ளை என்பவரின் வீட்டுக்குச் சென்றனர்.

அவர் சத்தமிட முயற்சித்தபோது வாளினாலும் கத்தியினாலும் குத்திவிட்டு மனைவியின் கழுத்தில் துப்பாக்கியைப் பிடித்துக்கொண்டு அங்கு இருந்த சுமார் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளையும் பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றனர்,

இவர்கள் அனைவரும் முகமூடி அணிந்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து மற்றுமொரு வீட்டை உடைத்து உள்ளே சென்று அங்கிருந்த சுமார் ரூபா 50 ஆயிரம் பெறுமதியான பொருள்களைக் கொள்ளையடித்தனர்.

[illegible] என்பவரின் வீட்டிலேயே இக்கொள்ளை இடம் பெற்றது. (இ-110)

நெருக்கடிமிக்க சூழ்நிலையிலும் பொலிவுபெறும் ஈழ இலக்கியம்

யாழ் கவிஞர் கௌரவ விழாவில் உரை

சென்னை, பெப் 17 ஈழத்துத் தமிழ் இலக்கியம், நெருக்கடி மிக்க சூழ்நிலையிலும் புதுமையும் பொலிவும் பெறுவது கண்டு தமிழ் கூறும் நல்லுலகம் பெருமை அடைகிறது.

சென்னை ஐயப்ப நகரில் யாழ்ப்பாணத்துக் கவிஞர் திரு. க. த. ஞானப்பிரகாசம் கௌரவிக்கப்பட்ட விழாவில் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் கலாநிதி இரா. குமாரவேலன் இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

கவிஞர் ஞானப்பிரகாசம் அவர்களால் இயற்றப்பட்டு கொழும்புத் தமிழ்ச் சங்கத்தினால் வெளியிடப்பட்ட 'பாரதி பிள்ளைத் தமிழ்' என்ற நூல் பாரதி நூற்றாண்டை முன்னிட்டு வெளியிடப்பட்ட கவிதை நூல்களில் முதலிடத்தைப் பெற்றுப் பாராட்டும் வழங்கப்பட்டது

சென்னை பாரதி இளைஞர் சங்கமும், சென்னைத் தமிழ் இலக்கிய கழகமும் ஒன்றிணைந்து எடுத்த விழாவில் திரு. ஞானப்பிரகாசத்துக்குக் 'கவிமாமணி' என்ற பட்டம் வழங்கப்பட்டது.

கலாநிதி. வி எஸ். மணிபாரதி அடிப்பொடி வே.மு. மந்திரம் சீனி திருநாவுக்கரசு, பெருங்கவிக்கோ வா. மு சேதுராமன் ஆகியோரும் விழாவில் பேசினார்கள். (இ-9)

பாடசாலைக்கு திறந்த வெளியரங்கு

மானிப்பாய், பெப் 18 இணுவில் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலைக்கான திறந்த வெளியரங்கு கட்டடத்தை அமைத்துக் கொடுக்க இணுவில் அபிவிருத்திச் சங்கம் முன்வந்துள்ளது!

திறந்த வெளியரங்குக்கான அத்திவாரக்கல் கடந்த தைப்பூச நாளன்று நடப்பட்டது. பாடசாலை அதிபர் திரு. செ. சோதிப்பெருமாள் தலைமையில் நடைபெற்ற அடிக்கல் நடும் விழாவில் மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு எஸ் தனஞ்செயன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். (இ-90)

4 நாட்களாக படகுச் சேவை குறைப்பு

குறிகாட்டுவான்-நெடுந்தீவு படகுச்சேவை தற்போது வாரத்தில் நான்கு நாட்கள் மட்டும் நடைபெற்று வருகின்றது.

படகுச்சேவை குறைப்பால் இப்பகுதி பிரயாணிகள் பிரயாண கஷ்டத்தால் மிகவும் அவதிப்படுகின்றனர், (இ-88)

படகுச் சேவை கட்டணம் அதிகரிப்பு

மண்டைதீவு, பெப், 18 மண்டைதீவு - குருநகர் படகு சேவை கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது

தற்போது ஏற்பட்டுள்ள டீசல் தட்டுப்பாடு காரணமாக வழமையான கட்டணத்திலும் 5 ரூபா கூடுதலாக அறவிடப்படுகிறது (இ-88)

போலி ஏஜன்ஸிகளிடம் இருந்து

பாஸ்போர்ட்டுகள் கைப்பற்றப்பட்டன

சுன்னாகம், பெப்,18 பலபோலி ஏஜென்ஸிகளிடமிருந்து பொது மக்களின் பாஸ்போர்ட்டுக்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றி உள்ளனர்.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஆசைகாட்டி பல போலி ஏஜன்ஸிகள் பொது மக்களிடமிருந்து பெருந்தொகையான பணத்தையும் பாஸ்போர்ட்டுகளையும் கையாடல் செய்துள்ளதாக பல முறைப்பாடுகள் விடுதலைப் புலிகளின் சுன்னாக பிரதேச அலுவலகத்தின் பொறுப்பாளர் திரு சுதனிடம் தெரிவிக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து நடத்தப்பட்ட தேடுதல் வேட்டையிலேயே பாஸ்போர்ட்டுகள் மீட்கப்பட்டன.

சுன்னாகம் பிரதேச பொறுப்பாளரது பணி

சில பாஸ்போர்ட்டுகள் வருமாறு:-

யாழ்ப்பாணம் திருமதி த தர்மசோதி,

இணுவில் திரு சின்னத்தம்பி சண்முகம், ஜெயமோகன்,

யாழ்ப்பாணம் திரு சிவப்பிரகாசம் இரத்தினம், திரு. தபசி இராசேந்திரன்,

சுழிபுரம் திரு கே. சண்முகநாதன். (இ-27)

மினிபஸ் சேவை நிறுத்தம்

மண்டைதீவு, பெப் 18 மண்டைதீவு-அராலித்துறை மினிபஸ் சேவை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது

தற்போது ஏற்பட்டுள்ள டீசல் தட்டுப்பாடே இதற்குக் கார

தென்னந்தும்பு தொழிற் பயிற்சி நிலையங்கள்

சுன்னாகம், பெப் 18 யாழ்ப்பாணம் மக்கள் அபிவிருத்திச் சங்கத்தின் நிதியுதவியுடன் ஊறணி, பலாலி, மயிலிட்டி ஆகிய பகுதிகளில் மூன்று தென்னந்தும்பு தொழில் பயிற்சி நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன

மயிலிட்டி ஊறணி பங்குத் தந்தை அருட்திரு கே பி சந்திரபாப்பிள்ளை அடிகளார், உதவிப் பங்குத்தந்தை அருட்திரு ஜெரூட் அடிகளார், மறையாசிரியர் திரு.ம. ஜெபசீலன் ஆகியோரால் இந்த நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டன.

மயிலைப் பங்கு இளைஞர் ஒன்றியம் நடத்தும் இந்த இலவச பயிற்சி நிலையங்களால் சுமார் நூறு யுவதிகள் பயன் பெறுகின்றனர்.

பயிற்சியை வெற்றிகரமாக முடித்து வெளியேறுவோர் தமது வீடுகளில் இருந்தே குடிசைக்கைத் தொழிலாக இவற்றைச் செய்வதற்குரிய ஒழுங்குகளை யாழ்ப்பாணம் தேசிய தென்னந்துப்பு தொழிற்சாலை இயக்குநர் திரு சண்முகசாமியின் ஆலோசனையுடன் மயிலைப் பங்கு இளைஞர் ஒன்றியம் செய்து வருகின்றது. (இ-27)

பிரயாண ஒழுங்குகள்

சவூதி அரேபியா:- OPEN VISA

லிபியா:- எலெக்றிக் வெல்டிங், காஸ் வெல்டிங்
அனுபவம் உள்ளவர்களுக்கு மட்டும்.

சிங்கப்பூர்:- கப்பலில் வேலை செய்வதற்கு விரும்புவோருக்கான பயண ஒழுங்குகள்

விபரங்களுக்கு கீழ்க் காணும் முகவரியில் உடன் தொடர்பு கொள்ளவும்.

றை ஸ்ரார் றவல்ஸ்
இல. 6, நவீன சந்தை மேல்மாடி
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 23881

OM SAIRAM
மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

செல்வி ஐமுனளினி பரமானந்தம் (நிலா)

மூவாண்டு சென்றாலும் மூவாத நினைவாலே
நிலா! உனையே நிதம் தேடி நோகின்றோம்
– உன்
பாறுதலும் பல எழிலும் பண்பும் பசுமையாய் நிலைத்திருக்க
சதா நாம் சாகின்றோம் நிலா நீ அறிவாயோ
காதினிக்க நீ பேசுமொழி கேட்பது- இம்
மேதினியில் இனி என்றோ! நிலா
வானிலாவாகி நீ வளர்கின்றாய், தேய்கின்றாய்
எம் நினைவு உனையும் சீண்டுவதனாலோ!

நிலா உன் ஆத்மா பிரசாந்தி பெறப் பிரார்த்திக்கும்,
அன்பு அம்மா, அக்கா,
யம்பா அண்ணா, ரேசன் ராகு,
யோகன் மற்றும் உறவினர்.

உதய சங்கற்பம்

துன்பமும் கடவுள் தந்த பரிசே. அத் துன்பம் கடவுட் கருணையின் சின்னமாகும்.
— அன்னை சாரதாதேவி.

உதயன்

இல,15,2ஆவது ஒழுங்கை தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம் 18-02-1987 த.பெ.இல. 23

அஞ்சலி மட்டும் போதாதே!

யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும் கடந்த மூன்று தினங்களாக துக்கத்தில் ஆழ்ந்திருந்தது. ஒவ்வொரு வீடும், வீதியும் அங்கு வாழ்ந்த நெருங்கிய உறவினர் ஒருவரை இழந்தது போன்று சோகத்தில் மூழ்கியது.

மக்கள் தங்கள் துக்கத்தைத் தெரிவிப்பதற்காகத் திங்கட்கிழமை நாளாந்த அலுவல்களை முற்றாக நிறுத்திக் கொண்டனர். கடைகள் திறக்கவில்லை வாகனங்கள் அதிக அளவில் சேவையில் ஈடுபடவில்லை. பாடசாலைகள் நடக்கவில்லை சந்தைகள் கூடவில்லை. எங்கும் சோகமயம். அவர்கள் சுவாசித்த காற்றில் கூட சோக இசை.

நாட்டுக்கு, மக்களுக்குத் தொண்டு செய்யும் தலைவர்கள் மறையும்போது மக்கள் தங்கள் குடும்ப அங்கத்தவரில் ஒருவர் இறந்து விட்டது போன்ற உணர்வு உண்டு. அந்த உணர்வின் பிரதிபலிப்பே நாடளாவிய, பிரதேசமளாவிய துக்க அனுஷ்டிப்புக்குக் காரணமாகும்.

ஈழத்தில் இன்றைய தமிழர் வாழ்வில் நாளாந்தம் உயிர்ப்போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது

மக்கள் மனம் மரத்துப்போகும் அளவுக்கு அரச அக்கிரமமும், அநியாயமும் தமிழ்ப் பிரதேசங்களில் தலைவிரித்து ஆடுகின்றன.

சன்னத்தால் சாவோரும், ஷெல் தாக்கிச் செத்து மடிவோரும், குண்டு வீச்சில் உயிரிழப்போரும் அனந்தம்.

இவர்களது இழப்பின் மத்தியிலும், அழிவின் மத்தியிலும் தமது உயிரைத் துச்சமென மதித்து நாட்டைக் காக்கவும், இழந்த மண்ணை மீட்கவும், அரசியல் சுதந்திரத்தை ஈட்டவும் போராடுபவர்கள் தான் எங்கள் இளைய தலைமுறையினர்.

சாவை ஒவ்வொரு நிமிடமும் எதிர்நோக்கித் தமது வாழ்வையும் உயிரையும் தியாகம் செய்து நாட்டுக்காகப் போராடும் வீர மறவர்கள் அவர்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தமிழ் மண்ணின் தொண்டர்கள்.

எனவே ஒரு சாமானியனின் உயிரிழப்பை விட ஒரு போராளியின், ஒரு தொண்டனின் இழப்பு நாட்டுக்குப் பேரிழப்பு. களத்துக்குப் புறப்பட்ட வீரனின் உயிரிழப்பையும் சாதாரண மனிதனின் உயிரிழப்பையும் ஒரே தட்டில் வைத்து நிறுக்க நினைப்பது ஒவ்வாது.

கைதடியில் நடந்த பொல்லாத விபத்தில் சடுதியாய் உயிர் நீத்த பத்துப் போராளிகளுக்கும் மக்கள் அஞ்சலி செலுத்தி ஆழ்ந்த துக்கம் அனுஷ்டித்ததின் அர்த்தமே அதுதான். தனக்கென வாழாது தமது மக்களுக்கென, மண்ணுக்கென தம் உடல், பொருள், ஆவி அத்தனையையும் அர்ப்பணித்த வீரச் செம்மல்கள் அவர்கள். தியாகத் தீபங்கள்.

அவர்களது இழப்பு உற்றாருக்கோ அல்லது ஒரு குறிப்பிட்ட அணியினருக்கோ மட்டும் ஏற்பட்ட இழப்பல்ல தமிழ் மண்ணுக்கு, தமிழர்கள் அனைவருக்கும் ஏற்பட்ட இழப்பு. அந்த வீரவேங்கைகளுக்கு மக்கள் உரியபடி அஞ்சலி செலுத்தியது மேலும் பல மறவர்கள் உருவாக உந்து சக்தியாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. எமது அஞ்சலியும் உரித்தாகுக. விபத்தில் உயிரிழந்த பொது மக்களுக்கும் அஞ்சலிகள்.

இந்த இடத்தில் ஒரு விடயத்தை எடுத்துக் கூற வேண்டிய அவசியம் ஏற்படுகிறது

மாமூல் வாழ்க்கையைத் தாம் நடத்திக் கொண்டிருக்க, இளைஞர்கள் சுதந்திரம் வாங்கித் தருவார்கள் என்று எண்ணியவாறு எமது மக்களில் பலர் இருக்கிறார்கள். இளைஞர்கள் வேறு தாம் வேறு என்று கன்னை பிரிக்கும் மனோபாவமே மேலோங்கி நிற்கிறது. இளைஞர்கள் செய்யும் பணியில் தாமும் பங்கேற்க வேண்டும் என்ற பக்குவம் பலருக்கு இன்னமும் இல்லை. ஒவ்வொரு மனிதனாலும் ஒவ்வொரு விதத்தில் சுதந்திரப் போரில் பங்கு எடுக்க முடியும்— பங்கெடுத்தாக வேண்டும்.

சுதேசியப் பொருள்களுக்கு ஆதரவு நல்குவதும், படாடோபங்கள், ஆடம்பரங்களைத் தவிர்ப்பதும் சுதந்திரப் போராட்டத்துக்கு உதவுபவையே. சுதந்திர உணர்வின் பிரதிபலிப்புகளே.

நம்மில் எத்தனை பேருக்கு சுகபோகங்களைத் துறந்து சுதந்திரத்துக்கு உதவும் மனப்பக்குவம் உண்டு.

எரிபொருள் தடை என்றதும் இளைஞர்களால் வந்த வினை என்று உள்ளுக்குள் திட்டிக்கொள்வோரே அதிகம். எரிபொருளுக்குப் பதிலாக மாற்று வழிகளைக் கையாள வேண்டும் என்று நினைப்பவர்கள் மிகக் குறைவு. என்ன விலை கொடுத்தும் பெற்றோல் வாங்கி வாகனத்தில் ஓடவேண்டும் என்று எண்ணுவோரும் உண்டு. அதன் மூலம் விலை உயர்வுக்கும் கள்ளச் சந்தைக்கும் அவர்கள் உதவுகிறார்கள், ஊக்கமளிக்கிறார்கள்.

நெருக்கடி மிகுந்த நேரத்தில் இது ஆகுமா கூடாதா என்று அநேகர் சிந்திப்பது இல்லை. ஏற்கனவே அனுபவித்த சகல வசதிகளையும் எப்படியும் தொடர்ந்தும் அனுபவிக்க நினைக்கிறார்கள். சின்னஞ்சிறு வசதிகளைத் தானும் துறந்து செயற்படுவதற்கு மக்களில் பலருக்கு மனமில்லையே!

களத்தில் அல்லது விபத்தில் இறந்த போராளிகளுக்கு, பெயருக்காக அஞ்சலி செலுத்துவது மட்டும் போதாது. அந்த இளைஞர்களின் தியாக உணர்வை, சுதந்திர உணர்வை, தொண்டு உள்ளத்தை மண்பற்றை எல்லோரும் தமதாக்கிக் கொள்ள வேண்டும்.

இன்றிலிருந்தாவது அதற்குச் சிறிதாவது முயற்சித்துப் பார்க்கிறீர்களா? அவ்வாறு ஒவ்வொருவரும் செய்தால் அரசு எந்த விதத்திலும் தமிழர்களை

சனத்தொகை அதிகரிப்பு குறித்து சீனஅரசு கவலை

ஆண்டுக்கு 1 கோடி 40 லட்சத்தால் உயர்வு

பீகிங், பெப். 17 சனத்தொகை வேகமாக அதிகரித்து வருகின்றது குறித்து சீன அரசு தீவிர கவலை தெரிவித்துள்ளது.

சீனாவின் சனத்தொகை 160 கோடியாக உள்ளது.

கடந்த ஆண்டில் மட்டும் சனத்தொகை ஒரு கோடி நாற்பது லட்சத்தினால் அதிகரித்தது இலங்கையின் சனத்தொகையே இத்தளவு தான்

அதிகரிப்புக்குக் காரணம், அரசு அதிகாரிகள் குடும்பக்கட்டுப்பாட்டை சரியாக கடைப்பிடிக்கும்படி மக்களை வற்புறுத்தாததே என்று அரசுத் தலைமைப்பீடம் குறை கூறியிருக்கின்றது

ஒரு குடும்பத்துக்கு ஒரு குழந்தை என்ற திட்டத்தை 1979 இல் இருந்து சீன அரசு கடைப்பிடித்து வருகின்றது

இந்தக் கட்டுப்பாட்டில் இருந்து மக்களை மீறிச்செயல்பட விட்டதற்கு அரசு அதிகாரிகளின் கவனயீனமே காரணம் என்று சீன அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளது

1956இல் இருந்து சீனாவின் மக்கள் தொகை அதிகரித்து வந்தது. அப்போது 106 கோடி மக்கள் சீனாவில் வாழ்ந்து வந்தனர்

இதனைத் தடுத்து நிறுத்தி மக்கள் தொகையை 120கோடியுடன் கட்டுப்படுத்த அரசு திட்டம் இட்டு 'ஒரு குடும்பத்துக்கு ஒரு குழந்தை' என்ற திட்டத்தை 1979 இல் இருந்து கடுமையாக அமுல் நடத்தி வருகிறது.

எனினும் சனத்தொகை அதிகரிப்பைக் கட்டுப்படுத்த முடியாத நிலைமை அங்கு இருந்து வருகிறது (இ)

கொம்பை அகற்றி காண்டாமிருகங்களைக் காப்பாற்ற புதிய திட்டம்

புதுடில்லி, பெப். 17 காண்டாமிருகங்களைக் காப்பாற்றுவதற்கு இந்திய அரசு புதிய திட்டம் ஒன்றை வகுத்துள்ளது

அவற்றின் கொம்புகளை சத்திரசிகிச்சை மூலம் அகற்றி விடுவதே இத்திட்டம் ஆகும்.

கொம்புக்காகவே காண்டாமிருகங்களை வேட்டையாடுகிறார்கள் இதனைத் தடுக்கவே இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாக இந்திய வனவிலங்குப் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தியாவின் அஸ்ஸாம் மாநிலத்தின் வடகிழக்குப் பகுதிக்காடுகளில் காண்டாமிருகங்கள் உள்ளன

காண்டாமிருகக் கொம்புக்கு உலக சந்தையில் நல்ல கிராக்கி உண்டு

ஒரு கிலோகிராம் கொம்பு உலக சந்தையில் 16. 600 டாலருக்கு விற்கப்படுகிறது

காண்டாமிருகக் கொம்புகளில் இருந்து தயாரிக்கப்படும் மருந்து வகைகள் நரம்புத் தளர்ச்சியை நீக்கவும் பாலுணர்வை அதிகரிக்கவும் உதவுகிறதாம்.

கர்நாடக மாநிலத்தில் யானைகளை வேட்டையாடுபவர்களிடமிருந்து யானைகளைக் காப்பாற்ற அதிகாரிகள் கடந்த ஜூலை மாதம் இந்த மாதிரியான திட்டம் ஒன்றைச் செயற்படுத்தினர்.

யானைகளின் தந்தங்களை சத்திரசிகிச்சை மூலம் அகற்றினர். (இ எ)

பதவி நீக்கம்

மாஸ்கோ, பெப் 17 சோவியத் மாநிலங்களில் ஒன்றான கொரோனாவில் உள்துறை அமைச்சரும் மற்றும் அரச அதிகாரிகளும் பதவி நீக்கம் செய்யப்பட்டனர்.

சில பொது மக்கள் மீது பொலீஸார் நடத்திய காட்டுமிராண்டித் தாக்குதலைத் தொடர்ந்து, இந்த ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது

மூன்று சாட்சிகள் பொலீஸாரின் தாக்குதல் காரணமாக படுகாயங்களுக்காளானார்கள். (இ-எ)

யூதர் விடுதலை

மாஸ்கோ, பெப் 17 1983ஆம் ஆண்டில் இருந்து முகாமில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு இருந்த யூத அதிருப்தியாளர் ஒருவரை ரஷ்ய அரசு திங்கள் விடுவித்தது.

ஜோசப் பெகுன் என்பவரே அந்த யூதப் பிரசை.

இவரை விடுவிக்க வேண்டும் என்று கோரி மொஸ்காவில் கடந்த ஒரு வார காலமாக மனித உரிமைவாதிகள் சிலர் ஆர்ப்பாட்டம் நடத்தி வந்தனர். (இ-எ)

பாம்புக்கு கருணை காட்டாத வாகனச் சாரதிகள்!

ஓரியானு, பெப். 17 ஆமைகளுக்குக் கருணைகாட்டும் மோட்டார் வாகனச் சாரதிகள், பாம்புகளுக்குக் கருணைகாட்டுவது இல்லை.

அமெரிக்க விஞ்ஞானி ஒருவர் நடத்திய ஆய்வில் இது கண்டுபிடிக்கப்பட்டது.

வீதியின் குறுக்கே றப்பரில் செய்த ஆமைகளையும் பாம்புகளையும் இந்த விஞ்ஞானி போட்டிருந்தார். வீதியால் மோட்டார் வாகனங்களை ஓட்டி வந்தவர்கள் ஆமைகளுக்குமேல் ஏற்றாமல், ஒதுக்குப்புறமாக வாகனங்களை ஓட்டி வந்தனர்.

பாம்பைக் கண்டவுடன் அதன்மேல் வாகனங்களை ஏற்றி ஓட்டிவந்தனர். வாகனம் ஒன்றை ஓட்டிவந்த ஒரு பொலீஸ்காரர், பாம்புமேல் பலதடவை வாகனத்தை ஏற்றி அதனைக் கொல்ல முயற்சித்தார் இதனைப் பற்றைமறைவில் பார்த்துக்கொண்டிருந்த விஞ்ஞானி டேவிட் ஷெப்பர்ட் வெளியே வந்து,

''இது றப்பர் பாம்பு'' என்று பொலீஸ்காரரிடம் கூறினார். (இ-எ)

வெளி உலகில்

தாய்லாந்தில் ஆளும் கட்சி மீது இராணுவத் தளபதி கண்டனம்

பாங்கொக், பெப். 17 ஆளும் கூட்டணி, எதிர்க்கட்சிகள் மீது தாய்லாந்து இராணுவத் தளபதி சாவலித் யொங்கயுத் வசைமாரி பொழிந்துள்ளார்.

கூட்டம் ஒன்றில் பேசுகையில் ஆளும் கட்சித் தலைவர்களை கடுமையாக இவர் தாக்கிப் பேசினார்.

''நாட்டுக்குச் சேவை செய்வதில் அரசத் தலைவர்கள் பூரணமாக ஈடுபட வேண்டும். குறுகிய எண்ணத்துக்கு இடமளிக்கக் கூடாது. அரசியலில் இருந்து இராணுவத்தை ஒதுக்கி வைப்பதில் தான் இவர்கள் அக்கறை காட்டுகின்றனர்.

பெரும்பாலான அரசியல் கட்சிகள் வர்த்தக நிறுவனங்கள் போன்றும் அவற்றின் எம். பிக்கள் விற்பனை பிரதிநிதிகள் போன்றும் நடந்து கொள்கின்றனர்

இப்படி இராணுவத் தளபதி தெரிவித்தார். (இ-எ)

லெபனான் ஜனாதிபதி பிரிட்டன் விஜயம்

லண்டன், பெப் 17 லெபனான் ஜனாதிபதி ஜெமாயல் 5 நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு பிரிட்டன் சென்றுள்ளார்.

லெபனானில் நிரந்தர அமைதியைக் கொண்டுவர ஐரோப்பிய நாடுகள் உதவவேண்டும் என்ற கோரிக்கையை வற்புறுத்துவதே அவரின் லண்டன் விஜயத்தின் நோக்கம் என்று தெரியவருகின்றது

லெபனான் ஜனாதிபதி லண்டன் வந்து சேர்ந்ததும் வெளியுறவு அமைச்சர் ஜோப்ரி ஹோவுடன் பேச்சு நடத்தினார்.

கூரை விழுந்து மாணவர் பலி

சண்டிகார், பெப். 18 பாடசாலைக் கூரை முறிந்து விழுந்ததில் 9 மாணவரும் இரண்டு ஆசிரியரும் உயிரிழந்தனர்.

இடிபாடுகளுக்கு இடையில் அகப்பட்டுக் கொண்ட நூற்றுக்கணக்கான மாணவரைக் காப்பாற்றுவதில் பொலீஸார் ஈடுபட்டு இருந்தனர்.

பஞ்சாப் மாநிலத்தில் ஜலந்தர் நகருக்கு அருகில் இச்சம்பவம் இடம் பெற்றது. (இ-எ)

பிரிட்டனில் வேலை அற்றோர் அதிகரிப்பு

லண்டன், பெப் 17 பிரிட்டனில் வேலையில்லாத் திண்டாட்டம் 11.3 சதவீதமாக அதிகரித்து உள்ளது

கடந்த டிசம்பரில் சுமார் 33 லட்சம் பேர் வேலையில்லாமல் இருந்தனர்.

இந்த எண்ணிக்கை கடந்த ஜனவரியில் மேலும் 68 ஆயிரத்தினால் அதிகரித்துள்ளது. (இ-எ)

செய்திக்கொத்து

புனருத்தாரண திருப்பணி வேலை

வட்டுக்கோட்டை, பெப் 18 சங்கானை பட்டினசபை அலுவலகத்திற்கு அருகாமையிலுள்ள அருள்மிகு ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி கோவில் புனருத்தாரண திருப்பணிக்கான அத்திவாரக் கல் நடும் வைபவம் சங்கானை உதவி அரசாங்க அதிபர் திரு து. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் உட்பட பொதுமக்கள் பலர் வைபவத்தில் கலந்து கொண்டனர்.

சித்தன்கேணி கலைநகரைச் சேர்ந்த பிரபல சிற்பாசாரியார் திரு வே. சந்தசாமி கட்டட வேலைகளையும் சிற்ப வேலைகளையும் செய்யவிருக்கிறார். (இ-161)

காணி இடாப்பு

உடுப்பிட்டி, பெப். 18 சாவகச்சேரி கமநல சேவை நிலையப் பகுதியிலுள்ள நெற் காணிகள், மேட்டுக் காணிகள் பற்றிய திருத்திய காணி இடாப்பு மக்களின் பார்வைக்காக சாவகச்சேரி கமநலசேவைநிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இக் காணி இடாப்பில் திருத்தம் செய்வோரின் வசதி கருதி அவர்களின் முறைப்பாட்டிற்கேற்ப எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி இடாப்புகள் மீளத் திருத்தப்படும் (இ-157)

பதவி உயர்வுடன் இடமாற்றம்

மானிப்பாய், பெப் 18 யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை சுன்னாகம் உப அலுவலக மின்சார சபை ஊழியர்களான திரு. சா. சித்திரவேல், திரு பொ சிவலிங்கம், திரு ஆ. இரத்தினம் ஆகியோர் முறையே காங்கேசன்துறை, தெல்லிப்பளை, உடுவில் உப அலு

இடுபவர் சாவாக பதவி உயர்வுடன் அண்மையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பதில் ஆளின்றி இடமாற்றம் செய்யப்பட்டதால் சுன்னாகம் உப அலுவலகமின் வேலைகளுக்கு மிகுந்த சிரமம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது (இ-90)

கருத்தரங்குகள்

மானிப்பாய், பெப். 18 யாழ் மாவட்டப் பாடசாலைகளின் வர்த்தக — கணக்கியல் பாட ஆசிரியர்களுக்கான ஆண்டு 9 10 வர்த்தகபாட கருத்தரங்குகள் பின்வரும் திகதிகளில் நடைபெறும் என வர்த்தகபாட கல்வி அதிகாரி திரு சி சிவராஜா அறிவித்துள்ளார்.

பெப்ரவரி 17, 18 — நல்லூர், யாழ்ப்பாணம், வேலணை, புங்குடுதீவு இடம்: யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி

பெப்ரவரி 24 பருத்தித்துறை - உடுப்பிட்டி — இடம்; நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.

மார்ச்: 2, 3 - கோப்பாய் சாவகச்சேரி இடம்:கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி

மார்ச் 10, 11 மானிப்பாய், வட்டுக்கோட்டை காங்கேசன்துறை - இடம் சுன்னாகம் இராமநாதன் கல்லூரி

மார்ச் 16 பருத்தித்துறை, உடுப்பிட்டி இடம்: நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.

தளபாட அன்பளிப்பு

வட்டுக்கோட்டை. பெப். 18 வட்டுக்கோட்டை வட்டாரத்தில் உள்ள பாடசாலைகள் பலவற்றிற்கு அண்மையில் தளபாடங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

வட்டுக்கோட்டை கல்வி அதிகாரி திரு. ப. [illegible] முயற்சியால் வரவழைக்[illegible] தளபாடங்களே அவசியம் தேவைப்படுகின்ற பாடசாலைகளுக்கு முன்

கிராமப்புற யுவதிகளுக்கு தையல் மெசின்

யாழ்ப்பாணம், பெப் 18 யாழ் மாவட்டத்தில் உள்ள கிராமப்புற யுவதிகளுக்கு தையல் மெசின்கள் வழங்குவதற்கென தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கிராமப் புறங்களிலுள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மாதர் சங்கங்கள் மூலம் இந்த நிதியில் இருந்து தையல் மெசின்கள் வழங்கப்படவுள்ளன. (இ-5)

பாலர் பாடசாலை

வல்வெட்டித்துறை. பெப் 18 கதிரிப்பாய் ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையம் அப்பகுதி சிறுவர்களின் நன்மை கருதி பாலர் பாடசாலை ஒன்றை திறந்து வைக்க உள்ளது! (இ-160)

நினைவு தினமும் பரிசளிப்பும்

சுன்னாகம் பெப். 18 சுன்னாகம் ஸ்கந்த வரோதயக் கல்லூரி ஸ்தாபகர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை வியாழக்கிழமை முற்பகல் 9-00 மணிக்கு கல்லூரியில் நடைபெறுகிறது.

பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி ரி. கணேஸ்வரனும், வைத்திய கலாநிதி திருமதி ஆர். கணேஸ்வரனும் கலந்து சிறப்பிப்பார்கள்.

சுன்னாகம் இலங்கை வங்கி பதில் முகாமையாளர். திரு. வி. எஸ். [illegible] நினைவு உரை நிகழ்த்துவார்.

கல்லூரி அதிபர் திரு. பி. நாகரட்ணம்

களவாக மரம் வெட்டுவோருக்கு மரண தண்டனை வழங்க வேண்டும்

நீதி அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, பெப். 18 களவாக மரம் வெட்டுபவர்களுக்கும் மரண தண்டனை விதிக்க வேண்டும். இதைச் சட்டமாக்குவது குறித்து நான் பரிசீலனை செய்து வருகின்றேன்.

டெடிகமவில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் நீதி அமைச்சர் டாக்டர் நிஸங்கா விஜயரத்தின முன்கண்டவாறு சொன்னார்.

அமைச்சர் மேலும் சொன்னதாவது;

நான் அமைச்சர். இப்பதவியை உபயோகித்து நானும் களவாக மரம் வெட்டி விற்க முடியும். கசிப்புத் தயாரித்துப் பணம் சேர்க்க முடியும். அப்படி நான் செய்ய மாட்டேன். எனது பதவியைத் துஷ்பிரயோகம் செய்து நாட்டின் செல்வத்தைப் பாழடிக்கமாட்டேன்

மக்களின் தனிப்பட்ட சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் சட்டங்களைக் கொண்டுவந்தால் நான் அதை வன்மையாக எதிர்ப்பேன்.

இப்படி அமைச்சர் சொன்னார். (இ-எ)

றிசர்வ் படைக்கு பெண்களும்

கொழும்பு, பெப்.18 தேசிய இராணுவ றிசர்வ் படைக்கு முதல் தடவையாக பெண்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

முதல் தொகுதியாக 200 பெண்கள் சேர்க்கப்பட்டு பயிற்சி அளிக்கப்படுகிறது.

தம்புள்ள தொகுதியில் உள்ள அக்குரம்பொட முகாமில் இப்பயிற்சி வழங்கப்படுகின்றது. (இ-எ)

இன்றைய காலகட்டத்தில்

இரத்ததானம் அவசியம்

கொக்குவில், பெப். 18 இன்றைய கால கட்டத்தில் கிராமம் தோறும் இவ்வாறான இரத்ததான நிகழ்ச்சிகள் அவசியம் ஆகும்.

திருநெல்வேலி இந்து இளைஞர் மண்டபத்தில் இடம் பெற்ற இரத்ததான வைபவத்தில் திருநெல்வேலி பிரசைகள் குழுத் தலைவர் திரு க. இராஜசுந்தரம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாற்பது பேர் இரத்ததானம் செய்தனர். இதில் அரைவாசிப் பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பேராசிரியர் சிற்றம்பலமும் இந்நிகழ்ச்சிக்கு வருகை தந்திருந்தார்.

திருநெல்வேலி இந்து இளைஞர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்நிகழ்ச்சியில் சங்க உறுப்பினர்களுடன், திருநெல்வேலி வாழ் பொதுமக்களும் இணைந்து செயற்பட்டனர். (இ-69)

சமய சந்நிதிகளில்

வேதவன விநாயகர் கோயிலில்

சாவகச்சேரி,பெப் 18 கல்வயல் அருள்மிகு வேதவன விநாயகர் தேவஸ்தானத்தில் பரிவாரமூர்த்தியாகப் புதிய திருவுருவாயமைந்த ஸ்ரீ வள்ளி தெய்வயானையோடுகூடிய ஸ்ரீ சிவசுப்பிரமணியப் பெருமானுக்கு மகா கும்பாபிஷேகம் தைப்பூசத் தினத்தன்று சிறப்புற நடைபெற்றது.

சிறப்பாக நடந்தது

சாவகச்சேரி, பெப்.18 சாவகச்சேரி நுணுவில் கிழக்கு அருள்மிகு சுற்றுழி கந்தசுவாமி கோவில் புனருத்தாரண மகாகும்பாபிஷேகம் தைப்பூச தினத்தன்று சிறப்புற நடைபெற்றது.

பிரதிஷ்டா சிரோமணி ஸ்ரீசாமி விஸ்வநாதக்குருக்கள் முன்னின்று கிரியைகளை பக்திபூர்வமாக நடத்திவைத்தார். (இ-31)

பொய்யாமொழி

குறள்:

இன்சொலால் ஈத்தளிக்க வல்லார்க்குத்
தன்சொலால்
தான்கண் டனைத்திவ் வுலகு.

பொருள்:

இனிய சொற்களுடன் தக்கவர்க்குப் பொருளை

★ வர்ணப் புகைப்படப் பிரதி ஒன்று
ரூ. 5/- மட்டுமே!
★ ProcessingFree(நெகடிவ்செய்யஇலவசம்)
★ வர்ண புகைப்படச் சுருள்கள் விற்பனைக்கு
KODAK — FUJI — KONICA
SAKURA — FORTE — TUDOR
ஆர்த்தி ஜுவலர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 23628

உதயன்
18 - 02 - 1987 புதன்கிழமை

அன்புடன் அழைக்கின்றது!
ஆர்த்தி ஜுவலர்ஸ்
★ தரமான வர்ண நிழற்படப் பிரதிகளை
★ கம்பியூட்டர் முறையில்
★ குறைந்த செலவில்
★ சிறந்த சேவையில்
பெற்றுக்கொள்ளலாம்.

வித்தாரம்

என்ன முரளித் தம்பி! ஆளைக் கண்டு பிடிக்கிறது கஷ்டமாயிருக்கு. நேற்றைக்குக் காண முடியல்லை நீ இப்ப ஒரே பிஸி மனுஷன் தான், எனக்குத் தெரியும்.

கொழும்பாலை வந்த லொறியிலை சாமான் எடுக்கப் போய் வாறியோ? கொழும்பிலை என்ன புதினமாம் ஏதாவது கேள்விப்பட்டியோ? உனக்குக் காதை அலவிரிக்கிற பழக்கம் தான். இல்லையே! ஆனால் எங்களுக்கு அது தானே தொழில்.

ரெலிபோன் துண்டிப்பு எங்களுக்குப் போட்ட தண்டனை எண்டு நாங்கள் நினைச்சதுண்டு. ஆனால் அது பெரிய திட்டத்தோடை தான் நடந்திருக்கு.

கிழக்கை வெற்றி கொண்ட விண்ணன் வடக்கையும் வெற்றி கொள்ளுற திட்டத்திலை அதுவும் ஒரு அம்சம். ரெலிபோனைத் துண்டிச்சுப் போட்டா இஞ்சை நடக்கிறது ஒண்டும் வெளியிலை, ஏன் கொழும்புக்கே தெரியாமப் போகும். அப்ப தாங்கள் ஏதாவது ஒரு முன்னேற்றத்தைச் செய்துபோட்டு பெரிசா வெற்றியெண்டு காட்டலாம் எண்டது ஒண்டு. மற்றது இஞ்சை என்ன அக்கிரமம் புரிஞ்சாலும் அதையும் வெளிக்குத் தெரியாமல் மறைச்சுப் போடலாம் எண்டது அடுத்தது.

இப்ப முதலாவது கட்டம் "புல் சுவிங்கில்" அமுலாகிக் கொண்டிருக்கு கொழும்பிலை இருந்து வந்தவர் சொன்னார். ரி. வி. றேடியோவிலை மல்லாகம் வரை இராணுவம் வந்திட்டுது எண்டு சொல்லியிக்கை சிங்களச் சனத்துக்குப் பெரிய புளுகமாம் உண்மையா அப்பிடித்தான் நடந்ததா நினைச்சு!

கொழும்பு பேப்பர்காரரே அதுகளைத்தானே பெரிசு பெரிசா விளாசினமாம் அவைக்கும் இஞ்சை என்ன நடக்குது எண்டு ஒண்டுமே தெரியாது மீடியா செண்டர்' வல்லுநர்கள் கற்பனையில் சிருஷ்டிப்பதை எல்லாம் தேவ வாக்காய் நினைச்சுப் பிரசுரிக்கினம். கிட்டுவும் ரஹீமும் கொழும்பிலை இருக்கிறதாக சிங்களப் பேப்பர் எல்லாம் வெளுத்து வாங்கினதாய்ச் சொன்னார். அப்ப உது மாதிரித்தான் மற்றதெல்லாம் இருக்கும் எண்டு யோசியேன்!

சிலவேளை பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை, கொட்டாஞ்சேனையிலை உதைச் சாட்டிப்போட்டு தமிழ்ப் பெடியளை எல்லாம் பிறகும் எக்கச்சக்கமாய்ப் பிடிச்சுக்கொண்டு போற திட்டமோ தெரியாது.

ரெலிபோனை துண்டிச்சுப்போட்டு தாங்கள் சாதிக்க முடியாதது எல்லாத்தையும் சாதித்ததாகச் சிங்களச் சனத்துக்குக் காட்டியும் சொல்லியும் நல்லாய்ப் பேய்க்காட்டுறார் அச்சாணியார் அதுகளும் நம்பிக் கொண்டு இருக்குதுகள்.

எத்தினை காலத்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே! இந்த நாட்டிலே!!

என்ன நான் கச்சேரி செய்யிறேன் எண்டு நினைக்கிறியே. சும்மா சொல்லக்கூடாது. படிக்கிற காலத்திலை எனக்குப் பாட்டுப் பாடுறதிலை ஒரு தனி விருப்பம். அதை வளர்த்துக்கொள்ளப் பிறகு நேர வசதி, சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அதை விடு

ரெலிபோன் சமாச்சாரத்தோடை எரிபொருள் தடையும் ஞாபகத்துக்கு வருகுது. பெற்றோல் டீசல் விலையள் நேற்று நல்லாய் இறங்கிவிட்டுது. பெற்றோல் போத்தல் ஐம்பது ரூபா வித்திது.

பூநகரியாலை வாறதையும் தடுத்தவை அப்பிடி வெண்டா எப்பிடி வருகுது எண்டு நான் ஆச்சரியப்பட்டது உண்டு பிறகுதான் விஷயம் சரியாத் தெரிய வந்திது.

இராமண்ணமாருக்குக் கொஞ்சம் கையுறையளை வைச்சால் தங்கடை 'காம்' தேவைக்குக் கிடைக்கிற எரிபொருளையே கைமாத்தி விடுவினம் எண்டு கேள்வி! ஏன் நடக்காதே?

முந்தியும் ஒருக்கா பொதுவான எண்ணெய்த் தட்டுப்பாடு இருந்தபோது தீவுப் பகுதியிலை உப்பிடித்தான் தாராளமாய் எண்ணெய் கிடைச்சது எண்டு நண்பர் ஒருவர் விஷயத்தை ருசுப்படுத்தினார்.

காரைநகர் கடற்படைக்காரர் ஒருக்கா கடலை றோந்து போய் விட்டு, ஒன்பது தடவை போனதாய் 'றெக்கோட்' பண்ணி மிச்சத்தை சனத்துக்கு கள்ள விலைக்கு வித்ததாக அடிச்சவையாம்.

அதைப்போல இப்பவும் நடக்க என்ன தடை?

தமிழருக்கு எதிராத்தான் போடுற கட்டுப்பாடுகளை தங்கடை ஆக்களே உடைச்சுவிடுவினம் எண்டு பாவம் அச்சாணியாருக்குத் தெரியயில்லை! அதுகளுக்கு ஒக்ஸ்போட் படிப்பு போதாது கொஞ்ச அனுபவம் தேவை. உந்த வகையிலை எங்களுக்கு உதவிற இராமண்ணமாருக்கு நன்றி சொன்னாலும் தகும் இல்லையே?



பாகிஸ்தான்ஜனாதிபதி இந்தியா வருகிறார்

'டெஸ்ட் மட்ச்' பார்ப்பதற்காக

புதுடில்லி, பெப்.17

இந்திய-பாகிஸ்தான் அணிகள் கலந்துகொள்ளும் மூன்றாவது கிரிக்கட்டெஸ்டை பார்ப்பதற்காக பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் ஸியா-உல்-ஹக் எதிர்வரும் சனிக்கிழமை இந்தியாவுக்கு விஜயம் செய்கின்றார்.

ஜெய்ப்பூரில் நடைபெறவுள்ள கிரிக்கெட் டெஸ்டைப் பார்க்க பாகிஸ்தான் ஜனாதிபதி ஞாயிற்றுக்கிழமை ஜெய்ப்பூர் செல்வார்.

மறுநாள் தாயகம் திரும்புவார் (உ-எ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி. இரண்டாம் ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 18 - 02 - 1987 தொலைபேசி இல. 24805 23075

Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15, Second Lane, Power House Road, JAFFNA.

Registered as a News-paper at the General Post Office. Under Number QJ / 94 / N/ 87

Telephone 24805, 23075

சிறு விமானங்களின் நடமாட்டம்: கடும் கண்காணிப்புக்கு உத்தரவு

கொழும்பு பெப் 18

பாரமில்லாத சிறுவிமானங்கள் நாட்டின் ஆகாயப் பிராந்தியத்தினுள் பறப்பது குறித்து கடுமையாகக் கண்காணிக்கும்படி சகல விமானத் தளங்களின் பொறுப்பதிகாரிகளுக்கும் அவசர உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது.

இலங்கை விமானப் படைத் தளபதி வால்டர் பெர்னாண்டோ இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இதனிடையில் பாரமில்லாத சிறுரக விமானங்களுக்கான உதிரிப் பாகங்களைத் தனியார் நிறுவனங்கள் நாட்டுக்குள் கொண்டு வருவதையும் அரசு தடைசெய்து உள்ளது

இப்படி உதிரிப்பாகங்களை நாட்டுக்குள் கொண்டு வந்த பின்னர் அவற்றை விமானமாக்கலாம்- அப்படிப்பட்ட விமானங்கள் எங்கிருந்தும் கிளம்பலாம்; எங்கும் இறங்க முடியும். இதற்கென தனியான விமான தளம் தேவை இல்லை

ஆகவே ஆகாயப் பிராந்தியம் தீவிரமாகக் கண்காணிக்கப்பட வேண்டும். அப்படி பறக்கும் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்படும். இதற்கான உத்தரவுகள் சகல விமானத் தளங்களுக்கும் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

இப்படி விமானப் படைத் தளபதி வால்டர் பெர்னாண்டோ சொன்னார். (உ-ஐ-எ)

சயனைட் அருந்தி தற்கொலை

யாழ்ப்பாணம், பெப் 18

கொமாண்டோக்களின் சுற்றி வளைப்பில் இருந்து தப்ப முயன்ற விடுதலைப் புலி ஒருவர் 'சயனைட்' அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

மட்டக்களப்பு பகுதியில் நேற்று முன்தினம் இச்சம்பவம் நடைபெற்றது.

சுனில் என்ற போராளியே மரணமானவராவார். (உ-10)

ஈழத்தமிழர்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விசா

விஸா கட்டுப்பாட்டை மீறுவதற்குரிய சகல நடவடிக்கைகளையும் இவர்கள் திட்டமிட்டுச் செய்துள்ளார்கள் என்பதற்கான சாட்சியம் விசாரணையில் வெளிவந்தது

இத்தமிழர்கள் அனைவரும் பொய்யான தஸ்தாவேஜுகளுடனோ அல்லது தஸ்தாவேஜுகள் இல்லாமலும் லண்டன் வந்துள்ளனர்.

ஒருவரிடமும் விஸா இல்லை.

இப்படி உள்துறை அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் சொன்னதாக பி.பி.ஸி. நேற்று மாலை அறிவித்தது

மேற்படி தமிழ் அகதிகள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டால் அவர்களுக்கு ஆபத்து ஏற்பட்டுவிடும் என பிரிட்டிஷ் எம் பி யான ஜெரமி கோர்பின் அறிவித்திருக்கிறார்

தமிழ் அகதிகளை திருப்பியனுப்பும்முடிவை தடுத்து நிறுத்தும் வகையில் பிரிட்டிஷ் மக்கள் அவையில் அவர் நேற்று வாதாடினார்.

இந்த அகதிகளின் சார்பில் குரல் எழுப்பும் அமைப்புகள் தமது வாதங்களைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பளிக்கத் தவறியதன்மூலம் பிரிட்டன் ஜெனிவா ஒப்பந்தங்களை மீறியுள்ளதாக அவர் குற்றம் சுமத்தினார்

வெளியேற்றும் உத்தரவை நிறைவேற்றுமக செய்யும் முயற்சிகளை மேற்கொண்டுள்ள ஜெரமி கோர்பின் இது தொடர்பாக பிரிட்டிஷ் உள்துறை அமைச்சரையும் நேற்றுச் சந்திக்கவிருந்தார் (உ-எ)

ஆசிரியர்கள் . . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யர்கள் நேற்றுக் காலை கோப்பாயிலிருந்து யாழ் கல்வித்திணைக்களம்வரை ஊர்வலமாக வந்தனர்.

கல்வியமைச்சின் செயலாளருக்கான மகஜர் ஒன்றையும் ஆசிரியர்கள் கல்வித் திணைக்களத்தில் கையளித்தனர்.

அங்கே கல்விப் பணிப்பாளர் இல்லாத காரணத்தால் பிரதம கல்வி அதிகாரி திரு கு சோமசுந்தரம் மகஜரைப் பெற்றுக் கொண்டார்.

இறந்த ஆசிரியையின் மரணம் சம்பந்தமாக பூரண விசாரணை நடத்தப்படவேண்டும்; அவரது குடும்பத்தினருக்கு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும் என மகஜரில் கேட்கப்பட்டுள்ளது.

மகஜரின் பிரதிகள் யாழ் அரச அதிபர், இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கம், இலங்கை ஆசிரியர் காங்கிரஸ், கல்வி அமைச்சின் ஆசிரியப் பயிற்சிப்பிரிவுப் பணிப்பாளர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

பிரதம கல்வி அதிகாரி திரு கு சோமசுந்தரம் மகஜரைப் பெற்றுக் கொண்டு உரையாற்றுகையில், ஆசிரியர் பற்றாக்குறை நிகழும் இந்நாட்களில் ஓர் ஆசிரியையை நாம் இழந்தது மிகவும் வருத்தத்துக்குரியதாகும்.

அவரின் குடும்பத்தினர் சக ஆசிரியர்கள் ஆகி [illegible] ளும் பங்குகொள்கிறது என்றார். (இ-5)

விளையாட்டரங்கு

வெற்றி தோல்வியின்றி முடிந்த ஆட்டங்கள்

மானிப்பாய் இந்து - சென் பற்றிக்ஸ்

யாழ்ப்பாணம், பெப்.18

மானிப்பாய் இந்து அணிக்கும் யாழ் சென் பற்றிக்ஸ் அணிக்கும் இடையேயான கிரிக்கெட் போட்டி வெற்றிதோல்வி இன்றி முடிவடைந்தது

கடந்த சனிக்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இப்போட்டி நடைபெற்றது.

கல்லூரிகளுக்கு இடையேயான சுற்றுப்போட்டியின் ஒரு கட்டமாக நடைபெற்ற இம்மோதலில் மானிப்பாய் இந்துக்கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. 9 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 198 ஓட்டங்களை எடுத்து இந்த அணி ஆட்டத்தை முடித்தது

என் சுதர்ஸன், வீரசிங்கம், புவனேந்திரகுமார் ஆகியோர் முறையே 81, 28, 26 ஓட்டங்களை எடுத்தனர்.

33 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை சௌந்தரநாயகம் கைப்பற்றினர் 37 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை மோஹன் கைப்பற்றினர்.

சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி 107 ஓட்டங்களை முதலாவது இன்னிங்ஸில் எடுத்தது ஆதவனும் சவரிமுத்துவும் முறையே 33, 30 ஓட்டங்களை எடுத்தனர்.

33 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை புவனேந்திரகுமாரும் 38 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை சுதர்ஸனும் வீழ்த்தினார்கள்

சென் பற்றிக்ஸ் அணி தொடர்ந்து விளையாடி ஆட்ட முடிவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 85 ஓட்டங்களை எடுத்தது.

சவேந்திரன் 54 ஓட்டங்களை எடுத்தார் 33 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை புவனேந்திரகுமார் வீழ்த்தினார். (இ-எ)

கொக்குவில் இந்து - ஸ்கந்தா

யாழ்ப்பாணம். பெப். 18

கொக்குவில் இந்துக் கல்லூரி அணிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணிக்கும் இடையேயான கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்தது.

கல்லூரிகளுக்கு இடையேயான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் ஒரு கட்டமாக இந்த மோதல் கடந்த வெள்ளி, சனிக்கிழமைகளில் கொக்குவிலில் இடம் பெற்றது.

கொக்குவில்இந்து அணி எல்லாவிக்கெட்டுக்களையும் இழந்து 239 ஓட்டங்களை முதலாவது இன்னிங்ஸில் எடுத்தது.

மகிதரன், கோகுலன், மோகன் ஆகியோர் முறையே 50, 62, 34, ஓட்டங்களை எடுத்தனர்.

எஸ். ரவிகுமார் 16 ஓவர்களில் 43 ஓட்டங்களைக்கொடுத்து5விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி எல்லாவிக்கெட்டுக்களையும் இழந்து 140 ஓட்டங்களையும் எடுத்தது.

சுரேஷ்நாதன் 39 ஓட்டங்களை எடுத்தார். கங்காதரன் 13 ஓவர்களில் 41 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். கோகுலன் 13 ஓவர்களில் 21 ஓட்டங்களைக் கொடுத்து 8 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

இரண்டாவது இன்னிங்ஸில் கொக்குவில் இந்து அணி 5 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 112 ஓட்டங்கள் எடுத்தது

ஸ்கந்தவரோதய அணி இரண்டாவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 83 ஓட்டங்கள் எடுத்தது. (இ-எ)

குருளைசாரணர் கூட்டம்

யாழ்ப்பாணம், பெப்.18

யாழ் மாவட்ட குருளை சாரண, சாரண தலைவர்களுக்கான விசேஷ கூட்டம் இன்று புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறுகிறது.

சகல குருளை சாரண, சாரண தலைவர்களையும் கலந்து கொள்ளுமாறு உதவி மாவட்ட ஆணையாளர் [illegible] கேட்டுள்ளார். (இ-5)

தமிழகம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாடு செய்வதில் அனைத்துக் கட்சிகளும் மும்முரமாக ஈடுபட்டுள்ளன

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் சில காலம் மௌனஞ்சாதித்து வந்த தி.மு.க தலைவர் கருணாநிதி தீவிரமாகச் செயல்பட முழுச்சம்மதம் தெரிவித்துள்ளார்.

இப்படி 'தினசரி' செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-ஐ-எ)

7 தமிழ்- - - -

(4-ஆம் பக்கம் பார்க்க)

தத்தை ஆரம்பித்தனர்.

கணவன்மார் தங்கள் குடும்பத்தினரை மூன்று வருடங்களாக நேரிற் சந்திக்கவே இல்லை.

தொலைபேசி மூலம் மனைவிமாருடன் பேச கணவர்மார் அனுமதிக்கப்பட்டனர்.

மனைவிமாரையும் பிள்ளைகளையும் இப்படி தனித்து தடுத்து வைத்திருப்பதை ஜெனீவாவில் உள்ள மனித உரிமை ஸ்தாபனங்களும் பத்திரிகைகளும் 'காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கை என்று கண்டித்துள்ளன

''சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், அகதிகள் ஆணையாளர் அலுவலகம் ஆகியவற்றுக்கு இடமளித்த ஜெனீவாவில் இந்த இதயமற்ற செயல் இடம்பெற்றுள்ளது.''

-இப்படி ஜெனீவா நாளிதழ் ஒன்று ஆசிரியர் தலையங்கத்தில் கண்டித்துள்ளது.

ஐ.நா. அகதிகள் ஆணையாளர் இது விஷயம் குறித்துக் கருத்துத் தெரிவிக்கவில்லை.

இப்பிரச்சினை குறித்து தீர்வு காணுவதற்கான பேச்சுக்கள் நடைபெறுவதாக அகதிகள் அலுவலகப் பேச்சாளர் ஒருவர் சொன்னார். (உ-எ)

பிரசைகள்குழு கூட்டம்

யாழ்ப்பாணம், பெப்.18

தமிழ் பிரதேச பிரசைகள் ஒன்றியத்தின் கூட்டம் இம்மாதம் 22-ஆம் திகதி காலை 10மணிக்கு நல்லூர் இந்து விடுதியில் நடைபெறும் (இ-எ)

லொறிக்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லொறியில் பொருட்கள் வந்தன.

பொலீசினால் மீட்கப்பட்ட பொருள்கள் சில யாழ்ப்பாணம் கொண்டு வரப்பட்டு உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கொள்ளையர்கள் தொடர்ந்தும் தலைமறைவாகி இருப்பதாகவும் பொலீசார் தேடுதல் நடத்தி வருவதாகவும் தெரிய வருகிறது (உ-10)

ஷெல்லுக்குப் பயந்து மக்கள் ஓட்டம்

பலாலி பெப். 18

பலாலி இராணுவ முகாமில் இருந்து திங்கட்கிழமை இரவு தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல்களின் போது மக்கள் இரவிரவாக கையில் அகப்பட்டவற்றை எடுத்துக் கொண்டு ஓடும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

சம்பவம் பற்றிய விவரம் வருமாறு:-

சந்திப் பகுதிகளை நோக்கி ஏவப்பட்ட ஷெல்லினால் அயல் கிராமத்து மக்கள் தென்பகுதிக்கு இடம் பெயரத் தொடங்கினர்

எனினும் மக்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளைக் குறிவைத்தாற்போல் கடுமையாக ஷெல் ஏவப்பட்டது.

ஷெல்கள், கட்டுவன் குரும்பசிட்டி, ஏழாலை வடக்கு, குப்பிளான், புன்னாலைக்கட்டுவன், திடற்புலம், குட்டியப்புலம், வயாவிளான் வடமூலை ஒட்டகப்புலம் அச்சுவேலி மக்கோனச்சந்தி, செல்வநாயகபுரம், வறுத்தலைவிளான், மயிலிட்டி ஆகிய பகுதிகளில் விழுந்து வெடித்தன.

வயாவிளான், ஒட்டகப்புலத்திலுள்ள திருமதி தேவசகாயம் என்பவர் பிடரியில் ஏற்பட்ட தாக்கத்தினால் நினைவிழந்தார்

வடமூலையில் திரு மாசிலாமணி ஆசிரியரின் வீடும் சேதமடைந்தது. அங்கு நின்ற ஆடொன்று இறந்தது

அச்சுவேலியில் திரு ரீ. எம். ஜோசேப் (பிரசைகள் குழுத் தலைவர்) வீடு சேதம் அடைந்தது.

திடற்புலத்தில் தோட்டத்துள் இரண்டு ஷெல்கள் விழுந்து வெடித்தன.

ஏழாலையில் பலாமரம் ஒன்றும் தென்னைமரங்கள் இரண்டும் முறிந்தன.

மயிலங்காட்டில் அருமை (மினிபஸ் டிறைவர்) என்பவரது மூன்று பிள்ளைகளும் காயமடைந்தனர். அவர்களது வீடும் பாதிக்கப்பட்டது.

அதேவூரில் ஸ்ரீ முருகன் பாடசாலைக்கு அண்மையில் கிணற்றடியில் விழுந்த ஷெல் ஒன்று கிணற்றுக்கட்டடத்தை இடித்துகிணற்றுள் வீழ்ந்தியதுடன் அருகில் இருந்த வீட்டையும் சேதப்படுத்தியது

குரும்பசிட்டியில் முத்தத்தம்பி சபாநாதன் வீடு உட்பட ஆறுவீடுகள் பாதிப்படைந்தன

கட்டுவனில் சன நெருக்கமான ஒரு கிராமத்தில் விழுந்த 10 ஷெல்கள் பல வீடுகளை நொருக்கியுள்ளன. (இ-119)

நீத்தார் பட்டியல்

வைத்திலிங்கம் - சின்னத்துரை

தாவடியைச் சேர்ந்த ஓய்வு பெற்ற தபாலதிபர் வைத்திலிங்கம் - சின்னத்துரை காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - இலட்சுமிப்பிள்ளை ஆகியோரின் சிரேஷ்ட புதல்வனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், தாவடிச் சந்தியைச் சேர்ந்த காலஞ்சென்ற வே த. கந்தையா - இராசம்மா அவர்களின் மூத்த மருமகனும், அருளானந்தநாதன் (உரும்பராய் இந்துக்கல்லூரி), காயத்திரிதேவி, சிவநாதன், இந்திராதேவி, பத்மநாதன், சபாநாதன், பத்மினிதேவி ஆகியோரின் அன்பு தந்தையும், பத்மினிதேவி (வைரமுழு கணேசா வித்தியாசாலை), பிரமேந்திரா (கனடா), ஆகியோரின் அன்பு மாமனும், சுகன்யா, நிருஷா ஆகியோரின் அன்புப் பேரனும், கனகம்மா, சுப்பிரமணியம், இரட்ணம்மா, சோமசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 18 - 02 - 87 இன்று புதன்கிழமை பகல் 12.00 மணிக்கு தாவடி மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
சி. அருளானந்தநாதன்

மிக்கேல்பிள்ளை - பிறான்சிஸ்அம்மா

காலமாகிவிட்டார்

இவர் காலஞ்சென்ற டேவிற் மிக்கேல் பிள்ளையின் (இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகஸ்தர்) அன்பு மனைவியும், ஞானப்பிரகாசம், மலர்த்தம்மா (குணம்), யோசேப் லூசியா (செல்வம்), சிங்கராசா புஷ்பநாயகி (புஷ்பம்), மிக்கேல்பிள்ளை பேரின்பநாயகம் (இளைப்பாறிய பொலீஸ் பரிசோதகர்), ஆகியோரின் அன்புத் தாயாருமாவார். அன்னாரின் பூதவுடல் 18 - 02 - 87 புதன்கிழமை மாலை 4 - 00 மணிக்கு உயரப்புலம் ஆனைக்கோட்டையிலிருக்கும் அன்னாரது இல்லத்திலிருந்து ஆனைக்கோட்டை புனித மரியாள் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். உற்றார் உறவினர் நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மிக்கேல்பிள்ளை பேரின்பநாயகம்
(மகன்)
(இளைப்பாறிய பொலீஸ் பரிசோதகர்)